# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

## பவித்ரா வன்னியாரச்சி சகுர்த மன்றம் (கூட்டிணைத்தல்)

**பவித்ரா வன்னியாரச்சி சகுர்த மன்றதைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

*களுத்துறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ லலித் எல்லாவல அவர்களால் 2022, செத்தெம்பர் மாதம் 21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2022, செத்தெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

[ *151 ஆம் சட்டமூலம்* ]


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா *18.00*** **தபாற் செலவு : ரூபா *15.00***

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## பவித்ரா வன்னியாரச்சி சகுர்த மன்றம் (கூட்டிணைத்தல்)

## பவித்ரா வன்னியாரச்சி சகுர்த மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை

''பவித்ரா வன்னியாரச்சி சகுர்த மன்றம்'' என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட நிலையத்தோடு சொல்லப்பட்ட குறிக்கோள்களையும், கருமங்களையும் பயனுறக் கொண்டுநடாத்தும் நோக்கத்துடன் இதற்கு முன்னர் இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் , சொல்லப்பட்ட மன்றமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுவரை சொல்லப்பட்ட நிலையத்தினால் வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டு நடாத்தியும் வந்துள்ளதாதலாலும் அத்துடன் அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாகவிருக்குமாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்

***1***. இச்சட்டம், 2022 ஆம் ஆண்டின்        ஆம் இலக்க, பவித்ரா வன்னியாரச்சி சகுர்த மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

பவித்ரா வன்னியாரச்சி சகுர்த மன்றத்தைக் கூட்டிணைத்தல்

***2***. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் தற்போது குறித்த, பவித்ரா வன்னியாரச்சி சகுர்த மன்றம் (இதனகத்துப்பின்னர் ''மன்றம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய அவ்வெண்ணிக்கையினரான உறுப்பினர்களும், இதனகத்துப் பின்னர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு, அதன்கீழ் ஆக்கப்படக்கூடிய விதிகளுக்கும் அமைய உறுப்பினர்களுக்காகச் சேர்த்துக் கொள்ளப்படும் அத்தனை ஆட்களும் ''பவித்ரா வன்னியாரச்சி சகுர்த மன்றம்'' என்னும் பெயர்மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமை கொண்ட (இதனகத்துப்பின்னர் ''கூட்டுத்தாப

னம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) ''கூட்டிணைக்கப்பட்ட குழு வாதலும் வேண்டும். அத்துடன் அப்பெயர்கொண்டு அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், அதன் விருப்பப்படி அதனை மாற்றவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்

**3**. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாக இருத்தால் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகிறது :-

(அ) இலங்கை அரசியலின் செயற்பாட்டு களத்தில் இரத்தின புரியின் தலைமைத்துவத்தின் அடையாளமான தர்மதாச வன்னியாரச்சி, பவித்ரா வன்னியாரச்சி ஆகிய அரசியல் அடையாளத்தின் தூய்மையான அர்தபுஷ்டியான ஒழுக்க விழுமியம் நிறைந்த அரசியல் நடவடிக்கைகளுக்கு நிபந்தனையின்றி எல்லைகளைக் கடந்து வெற்றிகரமாக வும் அர்ப்பணிப்புடனும் செயலாற்றுவதற்காக திருமதி பவித்ரா வன்னியாரச்சி அவர்களுடன் ஒன்றிணைந்த வர்களிடையே ஒருமைப்பாட்டை கட்டியெழுப்புதல்;

(ஆ) அதன் ஊடாக பவித்ரா வன்னிஆரச்சி என்ற முன்னணி தலைவியுடன் அரசியல், சமூக, பொருளாதார, கலாசாரம் போன்ற பொதுவான அனைத்து செயற்பாடுகளிலும் ஒன்றாகவும் தனித்தனியாகவும் உச்ச வலுவுடன் பங்களிப்பு மற்றும் வேறு தேவையான திறன்களின் மூலம் உச்ச பங்களிப்பைச் செய்தல்;

(இ) மக்களின் ஒழுக்க மற்றும் கலாசார விழுமியங்களைப் பாதுகாப்பதற்கும் பேணுவதற்கும் வழிவகைகளை மேற் கொள்ளல்;

(ஈ) சமூக விழுமியங்களைப் பாதுகாத்தல் மற்றும் அவற்றைப் பேணிச் செல்வதற்குத் தேவையான நிகழ்ச்சித் திட்டங் களை ஏற்பாடு செய்தல்;

(உ) சமய சகவாழ்வினை மேம்படுத்தல் மற்றும் தேவையான ஒத்துழைப்பு, அனுசரணை மற்றும் நன்கொடைகளை வழங்குதல்;

(ஊ) இலங்கையில் வாழ்கின்ற பல்வேறுபட்ட இனங்களுக்கிடையில் ஒற்றுமை மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்துவது தொடர்பாக நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்தல்;

(எ) பொதுமக்களின் நலன்புரி தொடர்பாக மேற்கொள்ள வேண்டுமென பணிப்பாளரின் தீர்மானிக்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றல்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்

**4.** (1) கூட்டுத்தாபனத்தின் முகாமையும் நிருவாகமும் தவிசாளர், செயலாளர், பொருளாளர் மற்றும் பதினொரு பேரைக் கொண்ட கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கிணங்கத் தெரிவு செய்து நியமிக்கப்பட்ட பணிப்பாளர்கள் ஒன்றின் மூலம் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கும் அமைய நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் ஆரம்ப உறுப்பினரான கௌரவ (திருமதி) பவித்ரா வன்னியாரச்சி பணிப்பாளர் சபையின் ஆயுட்காலத் தவிசாளராதல் வேண்டுமென்பதுடன், அதன் பின்னர் அவரது நெருங்கிய உறவினர் பணிப்பாளர் சபையின் அடுத்த தவிசாளராதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் முதலாவது பணிப்பாளர்கள் சபையானது இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகித்த நிருவாகசபையின் உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுவான தத்துவங்கள்

**5.** இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனம் கூட்டிணைக்கப்பட்ட குழு அதன் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையேனும் மேம்படுத்துவதற்கு அல்லது முன்னேற்றுவதற்கு அவசியமானவை

யான அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், செய்யவும், புரியவும், நிறைவேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையாதல் வேண்டும். இத்தத்துவங்களுள், கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல், செயற்படுத்தல், முடிவுறுத்தல் என்பவற்றுக்கும், பிணைப்பொறுப்புடனோ அல்லது பிணைப் பொறுப்பின்றியோ பணம் கடன் பெறுவதற்கும் அல்லது திரட்டு வதற்கும் அல்லது சேகரிப்பதற்கும், அதன் நிதிகளை முதலீடு செய்வதற்கும் மற்றும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறை வேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும், சேவையாளர் களையும் வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்தல், வேலையி லிருந்து நீக்குதல் என்பவற்றுக்குமான தத்துவத்துவமும் அடங்கும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்

**6**. (1) ஏதேனும் பொதுக்கூட்டத்தில், சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றிலிரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மை கொண்டு, பின்வரும் கருமங்களுள் எல்லாவற்றுக்குமாக அல்லது எவற்றுக்காகவும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்கு சட்டமுறையானதாதல் வேண்டும்:-

(அ) உறுப்பாண்மை வகைப்படுத்தலும், உறுப்பினர்களை அனுமதித்தலும், மீளப்பெறுதலும் அல்லது விலக்குதலும்;

(ஆ) பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல், பதவிதாங்குநர்கள் பதவி நீங்குதல் அல்லது பதவியை வறிதாக்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் அத்துடன் அவர்களது தத்துவங்களும், நடத்தையும், கடமைகளும்;

(இ) முகாமைக்குழு உறுப்பினர்களைத் தெரிவுசெய்தலும், அதன் தத்துவங்களும், நடத்தையும் மற்றும் கடமைகளும் மற்றும் குழு உறுப்பினர்களின் பதவிக் காலமும்;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்களினதும் முகவர்களினதும் சேவையாளர்களினதும் தத்துவங்களும் நடத்தைகளும், கடமைகளும், பணிகளும்;

(உ) கூட்டுத்தாபனத்தின் முகாமைக்குழுவின் அல்லது ஏதேனும் உபகுழுவின் கூட்டங்களின் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைக முறையும் அக்கூட்டங்களைக் கூட்டுதலும், நடாத்தலும், அத்தகைய கூட்டங்களின் நேரம், இடங்கள், கூட்டம் பற்றிய அறிவித்தல்கள், நிகழ்ச்சிநிரலும் அக்கூட்ட நடப்பெண்ணும் அதன் அலுவல்களைக் கொண்டுநடாத்தலும்;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமை செய்தலும், அதன் நிதிகளின் கட்டுக்காப்பும், அதன் கணக்குகளைப் பேணலும் கணக்காய்வு செய்தலும்; அத்துடன்

(எ) பொதுவில் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களை முகாமை செய்வதற்கும், அதன் குறிக்கோள்களை எய்துவதற்கும்.

(2) கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி, அதேபோன்ற ஒரு கூட்டத்திலும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதி ஒன்று ஆக்கப்படுவதைப் போன்று அதே முறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம் அத்துடன் சேர்க்கப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் ஒவ்வொருவரும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படற்பாலனவும் மன்றத்திற்குச் செலுத்தப்படற்பாலனவுமான கடன்கள்

**7**. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று இருக்கின்ற மன்றத்தின் எல்லாக் கடன்களும், பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதலும், கொடுத்துத் தீர்க்கப்படுதலும் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று மன்றத்துக்கு வருமதியான எல்லாக் கடன்களும் அல்லது இதன் பின்னர் பெறப்படவுள்ள எல்லாப் பணங்களும் மன்றத்திற்கு செலுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்

**8.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். கூட்டுத்தாபனத்திற்காக அல்லது அதன் கணக்கால் கொடை, அன்பளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவு தொகை, கட்டணங்கள் அல்லது மானியக்கொடைகள் என்ற வகையாக இதுகால வரை அல்லது இதன் பின்னர் பெறப்படவுள்ள எல்லாப் பணங்களும் முகாமைக் குழுவினால் தீர்மானிக்கக்கூடிய ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனம் இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தினால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்கான எல்லாப் பணத் தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தினால் அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்

**9.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக கூட்டுத்தாபனம் ஏதேனும் கொள்வனவு, மானியக் கொடை, நன்கொடை, இறுதி விருப்பாவணக் கையளிப்பு என்பவற்றின் பயனைக் கொண்டு அல்லது வேறுவகையில் அல்லது அதற்கு உரித்தாக வரக்கூடிய தான ஏதேனும் அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைப் பெறவும், வைத்திருக்கவும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இயலுமானதாலும், ஆற்றலுடையதாதலும் வேண்டும். அத்துடன் அத்தகைய எல்லா ஆதனங்களும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் 06 ஆம் பிரிவில் ஆக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழு விதிகளுக்கமையவும், அவற்றை விற்க, ஈடுவைக்க குத்துகைக்கு கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறு வகையில் கையுதிர்க்கவுள்ள முழுத்தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

கலைக்கப்பட்டதன் மீது எஞ்சியிருக்கின்ற ஆதனம்

**10.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மீது, அதன் எல்லாக் கடன்களையும், பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்த்த பின்னர் எத்தகையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனம் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படல் ஆகாது. ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை உடையதுமான அவற்றின் விதிகளின்படி அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டதுமான வேறு நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் கணக்குகளும் கணக்காய்வும்

**11.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நிதி ஆண்டு ஒரு பஞ்சாங்க ஆண்டாக இருத்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது அதன் வருமானமும் செலவினமும், சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றும் கூட்டுத்தாபனத்தின் வேறெல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் நியதிகளின் படி கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் அல்லது கணக்காய்வாளர் தலைமை யதிபதியினால் நியமிக்கப்பட்ட தகைமைபெற்ற கணக்காளர் ஒருவரினால் வருடாந்தம் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் “தகைமைபெற்ற கணக்காய்வாளர்” என்பது -

(அ) இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக்கப் பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொரு வராகவும் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராக வுமுள்ள தனியாள் ஒருவர் ;

(ஆ) கணக்காளர் குழுமமொன்றின் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை

**12.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது முகாமைக் குழுவின் இரு உறுப்பினர்கள் முன்னிலையிலன்றி எத்தன்மைத்தான சாசனமெதிலும் பொறிக்கப்படுதலாகாது என்பதுடன் அவர்கள் தாம் சமுகமளித்தமைக்கு அடையாளமாக அச்சாசனத்தில் அவர்கள் பெயர்களை எழுதி ஒப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஒப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சி ஒருவராக ஒப்பமிடுவதினின்றும் தனிவேறானதாலும் வேண்டும்

குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்

**13.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் கூட்டிணைக்கப்பட்ட குழுவினதும் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**14.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.